செங்கோட்டையிலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் பேருந்துவிடல்.

242—(*வினா எண் 11890) திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கோட்டையில் இருந்து இலத்தூர், ஆய்குடி, சுரண்டை, ராஜபாளையம் வழியாக சென்னை செல்ல திருவள்ளுவர் பேருந்து வேண்டும் என்ற கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சுரண்டையிலிருந்து சங்கரன்கோவில் வழியாக சென்னைக்கு பேருந்து வசதி கோரி வந்த மனுவின் மீது ஆய்வு செய்யப்பட்டு, சென்னை—செங்கோட்டை (வழி) மதுரை, ராசப்பாளையம், சங்கரன்கோவில், சுரண்டை, பாவூர் சத்திரம், தென்காசி வழியாக பேருந்து இயக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டையிலிருந்தும், தென்காசியிலிருந்தும், குற்றாலத்திலிருந்தும் திருவள்ளுவர் பஸ்கள் அதிகப்படியாக விடப்பட்டு இருக்கின்றன. மீண்டும் சென்னையிலிருந்து தென்காசி, குற்றாலம் செல்வதற்கு சுமார் 15 மணி நேரம் ஆகின்றது. ஆகவே படுக்கை வசதிகளைக் கொண்ட பேருந்துகளை விடும் எண்ணம் அரசுக்கு உண்டா?

அதே நேரத்தில் நெடுஞ்சாலைகளில், விவசாயிகள் கதிர்களை அறுக்கக் கூடிய நேரத்தில்,—நெல், சோளம், கேழ்வரகு போன்ற தானியங்களை அறுக்கக்கூடிய நேரத்தில்—களங்களை ரோடுகளில் ஏற்படுத்திக்கொள்கிறார்கள். இதனால் ஓட்டுநருக்கும், பேருந்தில் பயணம் செய்கிற பிரயாணிகளுக்கும் கண்களில் தூசி விழுந்து விபத்துக்கள் அதிகமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. எனவே நெடுஞ்சாலைகளில் களம் வைப்பதை தடுக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே 15 மணி நேரம் அந்தப் பேருந்து செல்லவேண்டியதாக இருக்கிறது என்று சொன்னார்கள். 15 மணிநேரத்திற்கு படுக்கை வசதியை ஏற்படுத்தினால் அவ்வளவு சரியாக இருக்காது. காரணம் ஏறத்தாழ மாலை 6 மணிக்கு படுத்துக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே இது நடைமுறையில் சரியாக வராது என்ற காரணத்தால், அமர்ந்து செல்கின்ற பஸ்கள்தான் விடப்படும். படுக்கை வசதிகளைக் கொண்ட பேருந்துகளை விடுவது கடினமாக இருக்கும்.

அடுத்து, பாதைகளில் களங்கள் அமைத்துவிடுகிறார்கள் என்று தெரிவித்தார்கள். இது விவசாயிகளுக்கு இருக்கிற ஒரு முக்கியப் பிரச்சனை. இரண்டு பக்கமும் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. பாதையிலே செல்கின்றவர்கள் மிகக் கடுமையான பிரச்சனைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்றாலும், விவசாயிகளுக்கு

1987 ஏப்ரல் 1]

அந்த அமைப்புக்கள் அங்கே இல்லாமல் அவர்கள் சங்கடப்படுகிறார்கள். எனவே இதைப் பற்றி கொஞ்சம் ஆய்வு செய்து, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே சொல்லி, என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதைப் பற்றி அரசாங்கம் முடிவு செய்யும்.

திரு. ச. சங்கரலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கோட்டையிலிருந்து ராஜபாளையம் வழியாக திருப்பதிக்குச் செல்கிற திருவள்ளுவர் பேருந்தை சங்கரநாயனார் தேவஸ்தானம் ஒரு முக்கியமான புண்ணியஸ்தலமாக இருப்பதால் சங்கரன்கோவில் வழியாக திருப்பதிக்குச் செல்ல அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, மூலக் கேள்வி செங்கோட்டையிலிருந்து சென்னைக்கு வருகிற பஸ்பற்றி. உறுப்பினர் திருப்பதிக்குப் போய்க் கொண்டிருக்கிறார். இப்படி ஒவ்வொரு வழித்தடமாக போய்க் கொண்டிருந்தால், இங்கே குறிப்புகள் கொண்டு வருவது கடினம். தனிப்பட்ட முறையில் அவருடைய கோரிக்கையைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து மதுரைக்குப் போகக்கூடிய திருவள்ளுவர் பஸ்ஸிலே தூங்கும் வசதி ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இதைப் பற்றி தனியாகப் பரிசீலிக்கலாம். தூங்குவதிலே இவ்வளவு அக்கறை காட்டுவது அவ்வளவு சரியாக இருக்காது, இதைத் தனியாகப் பரிசீலனை செய்து, முடியுமா என்று பார்க்கலாம்.

திரு. எஸ். ரெத்தினராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்குகிற வசதி கொண்ட பேருந்து, 15 மணி நேரம் பயணம் செய்பவர்களுக்கு தேவையில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஈரோட்டுக்கு 15 மணி நேரத்திற்கு கூடுதலாக ஆகிறதா? அல்லது பெங்களூருக்குச் செல்கிற அந்த தூங்கும் வசதி கொண்ட பேருந்து 15 மணி நேரத்திற்கு மேல் பயணம் செய்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 15 மணி நேரம் என்று சொன்னால், அந்த வண்டியிலே படுத்துக்கொண்டு போகிற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அமர்ந்து செல்வதற்கு சரியான வாய்ப்பு இருக்காது என்ற காரணத்தினால்தான் இதை நான் குறிப்பிட்டேன். ஈரோட்டுக்குப் போவதற்கு 15 மணி நேரம் ஆகாது. படுக்கிற நேரத்திற்கு இங்கேயிருந்து கிளம்பி, எழுகிற நேரத்திற்கு அங்கே போய் அடைகிறது.

திரு. கி. ராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, தூங்குவதற்கு வசதி உள்ள பஸ்களை விடமுடியாது என்று சொன்னார்கள். இப்போது, சென்னையிலிருந்து ராஜபாளையம் வழியாக 2, 3 திருவள்ளுவர் போக்குவரத்து பஸ்கள் சென்றாலும், ஒரு பஸ்ஸில் கூட கொஞ்சம் வசதியான புஷ் பேக் இருக்கைகள் கிடையாது. ராஜபாளையம் வழியாகச் செல்லுகிற பேருந்துகளில், ராஜ பாளையம் சட்டமன்ற உறுப்பினரான நானும், வாசுதேவநல்லூர் தொகுதி உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்களும், தென்காசி தொகுதி உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர்களும், கடையநல்லூர் தொகுதி உறுப்பினர்........(மணி அடிக்கப் பெற்றது.)

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: There is no Transport committee for Assembly.

திரு. கி. ராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஷ் பேக் இருக்கை வசதியுள்ள ஒரு திருவள்ளுவர் போக்குவரத்து கழக பஸ் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உங்களுடைய தொகுதி என்ற காரணத்தால் அதற்கு நீங்களும் பரிந்துரை செய்கிறீர்கள் என்று கருதுகிறேன். அவர்கள் சூப்பர் டிலக்ஸ் பஸ் விடவேண்டும் என்று கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். ஏன் சூப்பர் டிலக்ஸ் பஸ் விடப்படாமல் இருக்கிறது என்பதைப் பற்றி தனியாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கலாம். நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். எனவே அதை நினைத்தாவது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திடம் சொல்லி அங்கே விட முடியுமா என்று ஆய்வு செய்து பின்னால் சொல்கிறேன்.

சேரன்மாதேவி மேலச்சேவல் பேரூராட்சி பகுதியில் இணைப்புச் சாலை அமைத்தல்.

243—(*வினா எண். 12149) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) சேரன்மாதேவி தொகுதி, மேலச்சேவல் பேரூராட்சி மன்றப் பகுதியில் பாளையன் கால்வாய் பாலத்திற்கும் தாம்பரபரணி ஆற்றின் குறுக்கே தற்போது கட்டப்பட்டு வரும் பாலத்திற்கும் இடையே ஒரு இணைப்புச் சாலை போடும் கொள்கைக் குறிப்பு அரசிடம் உள்ளதா?